



ஆடி கடைசி வெள்ளிக்கிழமையையொட்டி, அஷ்டலட்சுமி அம்மன் அலங்காரத்தில் அருள்பாலித்த சேலம் குகை மாரியம்மன். (2-வது படம்) வளையல் காப்பு அலங்காரத்தில், நாமக்கல் மாவட்டம், சர்க்கார் பழைய பாளையம் ஏரிக்கரை அங்காள பரமேஸ்வரி அம்மன். (3-வது படம்) தங்கக் கவச அலங்காரத்தில் ஈரோடு பெரிய மாரியம்மன். (கடைசி படம்) வரலட்சுமி அம்மன் அலங்காரத்தில் ஈரோடு எல்லை மாரியம்மன்.

வியர்க்குதே

ஈரோடு

- ஈரோடு துணை மின்நிலையத்தில் பராமரிப்பு பணிகள் இன்று (17-ம் தேதி)நடைபெறவுள்ளது. எனவே, வீரப்பன்சத்திரம், இடையன்காட்டுவலசு, முனிசிபல் காலனி, டீச்சர்ஸ் காலனி, பெருந்துறை ரோடு, சம்பத்நகர், வெட்டுகாட்டுவலசு, மாணிக்கம்பாளையம், பாண்டியன் நகர், சக்திநகர், வக்கீல்தோட்டம், பெரியவலசு, பாப்பாத்திகாடு, பாரதிதாசன் வீதி, முனியப்பன் கோயில் வீதி, டவர்லைன் காலனி, திருமால்நகர், கே.என்.கே.ரோடு, மூலப்பட்டறை, சத்திரோடு, நேதாஜி ரோடு உள்ளிட்ட ஈரோடு நகர் முழுவதும் இன்று காலை 9 மணி முதல் பகல் 2 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படுவதாக மின்வாரிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்

- வளையப்பட்டி துணை மின் நிலையத்தில் இன்று (17-ம் தேதி) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. எனவே இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வளையப்பட்டி, மேட்டுப்பட்டி, புதுப்பட்டி, வாழவந்தி, ரெட்டையாம்பட்டி, ஜம்புமடை, செவ்வந்திப்பட்டி, குரும்பப்பட்டி, நல்லூர், திப்ரமகாதேவி, வடுகப்பட்டி, மோகனூர், ஒருவந்தூர், அரூர் மேடு உள்ளிட்ட பகுதிகளில் மின் நிறுத்தம் செய்யப்பட உள்ளது, என நாமக்கல் மின்வாரிய செயற்பொறியாளர் சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தேசிய அளவிலான தரவரிசை பட்டியலில் நந்தா பார்மஸி கல்லூரி சிறப்பிடம்

● **ஈரோடு**

தேசிய அளவிலான தரவரிசைப் பட்டியலில், ஈரோடு நந்தா பார்மஸி கல்லூரி ஐந்தாவது முறையாக இடம் பெற்றுள்ளது.

மத்தியக் கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவனங்களுக்கான என்ஐஆர்எப் எனப்படும் தரவரிசைப் பட்டியல், ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் பங்கேற்கும் கல்லூரிகளின் கற்பித்தல் முறைகள், உட்கட்டமைப்பு வசதி, வேலைவாய்ப்பு, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் விகிதம், ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடுதல், ஆராய்ச்சி காப்புரிமைகள், தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்கள், மாணவ-மாணவிகளின் தேர்ச்சி விகிதம், சமூக நற்பணிகள், தேசிய அளவில் மற்றும் பிற கல்வியாளர்களின் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப் படுகிறது.

நந்தா கல்வி அறக்கட்டளையின் கீழ் கடந்த 32 ஆண்டுகளாக இயங்கிவரும் நந்தா பார்மஸி கல்லூரியானது, ஐந்தாவது முறையாக தரவரிசை பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இதனடிப்படையில் 2024 -ம் கல்வியாண்டின் தரவரிசைப் பட்டியலில் தேசிய அளவில் 65-வது இடத்தையும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் பல்வேறு மருந்தியல் கல்லூரி களுக்கிடையில் இரண்டாவது இடத்தையும், நந்தா பார்மஸி கல்லூரி பெற்றுள்ளது.

சிறப்பிடம் பெறுவதற்கு உறுதுணையாக செயல்புரிந்த கல்லூரி முதல்வர் டி.சிவக்குமார், ஆசிரியர் கள் மற்றும் மாணவர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் மற்றும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம், மற்றும் முதன்மை நிர்வாக அலுவலர் கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

தேசிய அளவிலான தரவரிசைப் பட்டியலில், சிறப்பிடம் பெற்றதற்காக நந்தா பார்மஸி கல்லூரியின் முதல்வர் டி.சிவக்குமாருக்கு, நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

ரயில் பாதை பராமரிப்பு பணி காரணமாக பெங்களூரு- காரைக்கால் ரயில் இயக்கத்தில் மாற்றம்

● **சேலம்**

ரயில் பாதை பராமரிப்பு பணி காரணமாக, பெங்களூரு- காரைக்கால்- பெங்களூரு பயணிகள் ரயிலின் இயக்கத்தில் மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர்- சிதம்பரம் ரயில் நிலையங் களுக்கு இடையிலான ரயில் பாதையில் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பெங்களூரு- காரைக்கல்- பெங்களூரு பயணிகள் ரயில்களின் இயக்கத்தில் மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பெங்களூரு- காரைக்கால் (எண்.16529) ரயிலானது, நாளை (18-ம் தேதி) மற்றும் 21-ம் தேதி என இரு நாட்களுக்கு பெங்களூரு- விருத்தாசலம் வரை மட்டுமே இயக்கப்படும். மேற்கண்ட நாட்களில் விருத்தாசலம்- காரைக்கால் இடையே ரயில் இயக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், காரைக்கால்- பெங்களூரு (எண்.16530) ரயிலானது, வரும் 19 மற்றும் 22-ம் தேதிகளில், விருத்தாசலத்தில் இருந்து புறப்பட்டு, பெங்களூரு சென்றடையும். காரைக்கால்- விருத்தாசலம் இடையே இயக்கப்படாது என்று சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் குகை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடந்தது. இதில் மிதிவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணவிகள்.

படம்: எஸ். குரு பிரசாத்

மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கு சிறப்பு முகாம் என

தவறான தகவல் பரப்பினால் நடவடிக்கை

● சேலம் ஆட்சியர் எச்சரிக்கை

● **சேலம்**

மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாக, சமூக வலைதளங்களில் தவறான தகவல்களை பரப்புபவர்கள் மீது, காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மகளிரின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு மாதம் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தமிழக முதல்வர் 2023 செப்டம்பர் 15-ம் தேதி தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் தற்போது வரை 5,49,268 மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சமூக ஊடகங்களில் தற்போது எவ்வித முகாந்திரமுமின்றி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறிப்பிட்ட சில நாட்களில், மகளிர் உரிமைத் திட்டம் பெறுவதற்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாகவும், மனுக்களை வழங்கினால் அனைவருக்கும் உடனே உரிமைத்தொகை கிடைக்கும் எனவும் தவறான தகவல் பகிரப்பட்டு வருகிறது. இதுபோன்ற தவறான தகவல்களை, சமூக ஊடகங்களில் பரப்புபவர்கள் மீது காவல்துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் உள்ளிட்டோருக்கு மானிய உதவியுடன் நவீன சலவையகம் அமைக்க உதவி

● **சேலம்**

தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சேர்ந்தவர்களது பொருளாதாரத்தை முன்னேற்றும் விதமாக நவீன சலவையகம் அமைக்க தமிழக அரசு நிதி உதவியுடன் புதுமையான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

நவீன சலவையகம் அமைப்பதற்கு தேவையான இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் பிற முன் நிகழ்வுகளுக்கு தேவையான நிதியில் ரூ.3 லட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு விண்ணப்பிக்க 10 நபர்கள் கொண்ட ஒரு குழுவாக செயல்பட வேண்டும். இக்குழு உறுப்பினர்களின் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேற்படி திட்டம் மூலம் பயன்பெற விரும்புப வர்கள், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை (அறை எண்.110) அணுகலாம், என்று சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

19-ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
CIN U74999TN1971SGC005967

(இணையவழி மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஐடி.20/க.பி /ஒ.எண். 20/2024-25 நாள்:16.08.2024

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தப்புள்ளிகள் **"இரு உறை முறையில;"** இணையவழி வாயிலாக மட்டும் பின்வரும் பணிக்கு ஒத்த பணிகளில் முன் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: **19.09.2024 மாலை 15.30 மணி** (சேவையக கடிகார நேரத்தின் படி). பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **20.09.2024 மாலை 15.30 மணிக்கு** (சேவையக கடிகார நேரத்தின் படி) திறக்கப்படும்.

பணியின் பெயர்	திட்ட மதிப்பீடு	முன் வைப்புத் தொகை
மாநல்லூர் (EMC)- பகுதி - II - சிப்காட் தொழிற் பூங்காவில் உட்புற சாலைகளுடன் கூடிய மழைநீர் வடிகால், சிறு வாய்க்கால் பாலங்கள், மின் கம்பிவடம் (Electrical cable) கற்காரைக்குழாய்கள் (Hume Pipe) பதித்தல், தெருவிளக்குகள் மற்றும் உயர்மட்ட விளக்குகள் அமைக்கும் பணி.	ரூ. 9021.65 இலட்சம் (GST 18% உட்பட)	ரூ.45,21,000/-*

*முன் வைப்பு தொகையை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும் (https://tntenders.gov.in).

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி **(https://tntenders.gov.in)**

செ.ம.தொ.இ/3086/ஒப்பந்தப்புள்ளி/2024 **மேலாண்மை இயக்குநர்**

V.O.CHIDAMBARANAR PORT AUTHORITY

CIVIL ENGINEERING DEPARTMENT, TUTICORIN - 628004

SAGARMALA

NOTICE INVITING TENDER

#	Name of the work	Estimated cost put to tender value (Amount in INR)	Cost of Earnest Money Deposit (EMD) (Amount in INR)	Online Tender opening date
1	Attending retrofitting works at Fixed Fire Fighting System (FFFS) and Construction additional dolphin for handling smaller vessels at oil jetty	8,68,45,905	17,37,000	30.08.2024

Note: For eligible tenderers, downloading of bid documents from the NIC e-tendering website
i) https://etenders.gov.in/eprocure/app
ii) https://www.vocport.gov.in

Sd/-
Chief Engineer
VOCPA

வரி விளம்பரங்கள்

பொது

விற்பனை

CCTV CAMERA

எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

AN ISO 9001-2008 COMPANY

ஈஸிடெக் டிஜிட்டல் சொலிசன்ஸ்

இலவச டெமோவிற்கு அழைக்கவும்

74488 88904
95009 30200

www.easytechcctv.com

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்).

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
242513 002722	5000 MT ± 5% அலுவலகக்கழிவு காகிதத்தை (வெள்ளை பதிவுகள்) தமிழ்நாட்டிலிருந்து காகிதபுரத்தில் உள்ள TNPL Unit - Iக்கு பேல் வடிவில் கொள்முதல் செய்தல்	27.08.2024
242513 002766	திருவாளர் சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல் ஆலையிலிருந்து TNPL காகிதபுரம் ஆலைக்கு கரும்புச் சக்கைகள் / எரிபொருள் (நிலக்கரி / கச்சா லிக்னைட்) போக்குவரத்து மூலம் எடுத்து வருதல் / கொண்டு செல்லுதல்.	30.08.2024
242513 002755	தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்கள், பல்கலைகழகங்கள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பள்ளிகள் அரசு அச்சகங்கள், பொது துறை நிறுவனங்களில் உள்ள காலாவதியான விடைத்தாள்கள் / புத்தகங்கள் / வெள்ளைதாள்கள் / பத்திரிக்கை வெட்டுக்கள் முதலியவற்றை சேகரித்தல், ஏற்றுதல் மற்றும் காகிதபுரத்தில் உள்ள TNPL ஆலைக்கு போக்குவரத்து செய்தல்.	28.08.2024
இமெயில்	242513002722, 2755 - purchase.recycle@tnpl.co.in 242513002766 - purchase.trans@tnpl.co.in	

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/3035/ஒப்பந்தப்புள்ளி/2024 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
கிளை அலுவலகம்: சர்வே எண்.140, நாமக்கல், 3, நான்கு ரோடு, BSNL அலுவலகம் எதிரில், வேலூர், தமிழ்நாடு-638182					
1.	1183210170000004 1.Mrs.நதியா, 2.Mr.பாலாஜிகுமார்,	(i) 22.12.2022 21.12.2021 அன்றுள்ளபடி ரூ.5,45,074/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 26.04.2022 & நேரடியான சுவாதீனம் 05.01.2024	26.07.2024 அன்றுள்ளபடி ரூ.3,25,397/- (ரூபாய் மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்)	ரூ.9,94,000/- (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் மட்டும்)	ரூ.99,400/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்)

சொத்து விவரம்: நாமக்கல் பதிவு மாவட்டம், வேலூர் சார்-பதிவாளர் அலுவலகம் எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் சர்வே எண்.26/B பகுதி புதிய நத்தம் சர்வே எண்.498/8 இதில் 0-0184.50 சதுர மீட்டர், நத்தம் செட்டில்மெண்ட் பட்டா எண்.72 படி இதில் **வேலூர் சிறப்பு கிராம பஞ்சாயத்து,** வார்டு எண்.8, கைகோலார் தெரு, டைல்டு வீடு கதவு எண்.80, வரி மதிப்பீடு எண்.2937, புஞ்சை இடையர் மேல்முகம் கிராமம் என்னும் முகவரியில் மத்தியில் உள்ள அளவுகள்: கிழக்கு மேற்கு இருபக்கமும் 37 அடி, வடக்கு தெற்கு இருபக்கமும் 21 ½ அடி ஆக மொத்தம் 795 ½ சதுர அடி வீட்டு மனை **இதில் கட்டப்பட்டுள்ள டைல்டு வீட்டின் அளவுகள்: 18 x 16 = 288 சதுர அடி அல்லது 26.75 சதுர மீட்டர் மற்றும் தெற்கு பக்கம் கட்டப்பட்டுள்ள மற்றொரு டைல்டு வீட்டின் அளவுகள்: 18x 11= 198 சதுர அடி அல்லது 18.39 சதுர மீட்டர்** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அனைத்த வசதிகள், மின்சார இணைப்பு S.C.எண். 04-2267-001-591, தண்ணீர் குழாய் இணைப்பு மற்றும் அனைத்து இதர அனுபந்த உரிமைகள். எல்லைகள்: மேற்கு: G.சாந்தி மற்றும் G.சரவணன் ஆகியோர் சொத்து, தெற்கு: செல்லம்மாள், குப்புசாமி ஆகியோர் சொத்து, வடக்கு: கிழக்கு மேற்கு பஞ்சாயத்து சந்து, கிழக்கு: பாக்கியம் சொத்து.

வ. எண்.	கடன் கணக்கு எண் / பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி (ii) சுவாதீனம்	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
கிளை அலுவலகம்: எண்.30/3-2, மெயின் ரோடு, முல்லை நகர், சூரமங்களம், சேலம், தமிழ்நாடு 636005					
2.	1172210080000071 1.Mr.S.கௌரிராஜன் 2.Mrs.G.லதா 3.Mr.S.சதீஷ் குமார் 4.Mr.S.முருகன்	(i) 16.02.2022 15.02.2022 அன்றுள்ளபடி ₹ 10,57,794/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 20.07.2022 & நேரடியான சுவாதீனம் 21.03.2024	23.07.2024 அன்றுள்ளபடி ₹ 12,58,693/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)	₹ 16,33,100/- (ரூபாய் பதினாறு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நூறு மட்டும்).	₹ 1,63,310/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முன்னூற்று பத்து மட்டும்)

சொத்து விவரம் : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடன்சாவடி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.262/5, புதிய சர்வே எண்.868/4, **சொத்து வரி ரசீது கதவு எண்.352, எடங்கனசாலை கிராமம், சங்ககிரி தாலுகா என்னும் முகவரியில் 2292¾ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் அனைத்து அனுபந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 12.6 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 17.6 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கு திசையில் 13.0 மீட்டர், தெற்கு வடக்காக மேற்கு திசையில் 10.8 மீட்டர் (இதிலிருந்து), கிழக்கு மேற்காக 5.8 மீட்டர் (இதிலிருந்து), வடக்கு திசையில் 2.6 மீட்டர், மொத்தம் 2292¾ சதுர அடி. எல்லைகள்: நத்தம் சர்வே எண்.868/7 கிழக்கு மேற்கு பொது தெருவுக்கு வடக்கு, நத்தம் சர்வே எண்.868/2, சர்வே எண்.868/3 -க்கு தெற்கு, நத்தம் சர்வே எண்.868/2,5,6-க்கு கிழக்கு, நத்தம் சர்வே எண்.868/7-க்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 20.09.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 19.09.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 18.09.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: Mob: 81470 01897 / Mr.R.புஷ்பகாந்த்: Mob: 98431 14222 / Mr.ராம்பிரசாத் - Mob: 95009 96689

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு: Mr.பிரபாகரன் Mob: 74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம். i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 17.08.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: பெங்களூரு உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

மீதமுள்ள பங்குதாரர்களின் கவனத்திற்கு வெளியேறும் சலுவை பொது அறிவிப்பு

ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்

(ஓர் இந்திய அரசு நிறுவனம்) CIN: L25111UP1972GOI003599
1வது தளம், 3/481, விகல்ப் காண்ட், கோம்டி நகர், லக்னோ, UP 226010, இந்தியா. Tel.No. 0522-3119593
Email : csscootersindia@gmail.com, Website : www.scootersindialimited.com

இந்த வெளியேறும் சலுகை பொது அறிவிப்பானது, **("வெளியேறும் சலுவை PA")** விதிமுறை 26 மற்றும் SEBI **(ஈக்விட்டி பங்குகளை நீக்குதல்)** விதிமுறைகள், 2021-ன் பொருந்தக்கூடிய பிற விதிகள் மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் மூலம் அவ்வப்போது SEBI வழங்கிய விதிவிலக்குகளில் உள்ளபடி, இந்திய அரசு, கனரக தொழில்துறை அமைச்சகம், புது டெல்லி, நிறுவனத்தின் ஊக்குவிப்பாளர், நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு, தற்போது திரு. நவின் கவுல் **("கையகப்படுத்துபவர்")** மீதமுள்ள பொது பங்குதாரர்களுக்கு **("மீதமுள்ள பங்குதாரர்கள்")** ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்டின் **("நிறுவனம்")** பங்குச் சந்தையிலிருந்து அதாவது பிஸ்இ லிமிடெட் **("பிஎஸ்இ")**-லிருந்து தலா ரூ.10/- முகமதிப்பு கொண்ட **("ஈக்விட்டி பங்குகள்")** நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகளை தானாக முன்வந்து நீக்குவது தொடர்பாக. இந்த வெளியேறும் சலுவை PA, மே 03, 2023 தேதியிட்ட ஆரம்ப பொது அறிவிப்புக்கு **("IPA")**, டிசம்பர் 08, 2023 அன்று வெளியிடப்பட்ட டிசம்பர் 06, 2023 தேதியிட்ட பொது அறிவிப்பு மற்றும் டிசம்பர் 09, 2023 **("PA")** மற்றும் டிசம்பர் 20, 2023 தேதியிட்ட சலுகைக் கடிதம் **("சலுவை கடிதம்")** தொடர்ச்சியாக உள்ளது. இந்த விளம்பரத்தில் வரையறுக்கப்படாத விதிமுறைகள் IPA, PA மற்றும் சலுவை கடிதம் ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள ஒரே அர்த்தங்களை கொண்டிருக்கும்.

பிஎஸ்இ அதன் அறிவிப்பு எண். 20240605-51, நாள் ஜுன் 05, 2024 அன்று நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளில் வர்த்தகம் செய்வது (ஸ்கிரிப் குறியீடு : 505141) அதாவது 12.06.2024 முதல் நிறுத்தப்பட்டது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஸ்கிரிப் ஜுன் 20, 2024 முதல் பிஎஸ்இ-லிருந்து நீக்கப்பட்டது.

பட்டியலிருந்து நீக்கிய சலுகைக்கு பிறகு தொடர்ந்து ஈக்விட்டிப் பங்குகளை வைத்திருக்கும் மீதமுள்ள பங்குதாரர்கள் 20.06.2024 முதல் 19.06.2026 வரை அல்லது SEBI-ஆல் அனுமதிக்கப்படும் தேதி **("வெளியேறும் விண்டோ")** வரை ஒரு ஈக்விட்டி பங்கிற்கு **("வெளியேறும் விலை")** ரூ.31.78/- என்ற விலையில் தங்கள் ஈக்விட்டி பங்குகளை வாங்குபவருக்கு டெண்டர் செய்ய முடியும். மீதமுள்ள பங்குதாரர்களுக்கு **("வெளியீட்டு கடிதம்")** வெளியேறும் விண்ணபத்துடன் சலுகையின் வெளியேறும் கடிதம் அனுப்பப்படுகிறது.

மீதமுள்ள பங்குதாரர்கள் தங்கள் வெளியேறும் விண்ணபத்தை எந்த தாமதமும் இல்லாமல் தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும். வெளியேறும் விண்ணப்பப் படிவம் கையகப்படுத்துவரால் பெறப்பட்டு, தொடர்புடைய காலண்டர் மாதத்தின் முடிவில் இருந்து 10 வேலை நாட்களுக்குள், கையகப்படுத்துபவர் மாதாந்திர அடிப்படையில் பணம் செலுத்துவார் என்பதை நினைவில் கொள்ளவும் **("மாதாந்திர கட்டணம் சுழற்சி")**. ஆகஸ்ட் 31, 2024 முதல் 10 வேலை நாட்களுக்குள் முதல் மாதாந்திர கட்டணம் சுழற்சி முறையில் செய்யப்படும்.

வெளியேறும் கடிதம் கிடைக்காத பட்சத்தில் அல்லது ஏதேனும் கூடுதல் விவரங்கள் அல்லது வினவலுக்கு, நீங்கள் பதிவாளருக்கு எழுதலாம் அல்லது நிறுவனத்தின் www.scootersindialimited.com என்ற இணையதளத்தில் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மேலாளர்/பதிவாளர் இணையதளத்தில் இருந்து அதன் நகலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வெளியேறும் சலுகைக்கான மேலாளர்	வெளியேறும் சலுகைக்கான பதிவாளர்
Corporate Professionals **கார்ப்பரேட் புரேப்பசனல் கேப்பிடல் பிரைவேட் லிமிடெட்** டி-28, தெற்கு விரிவு பகுதி-1, புது டில்லி - 110049, இந்தியா **தொடர்பு நபர் : திருமதி.அஞ்சலி அகர்வால்,** **போன்:** 011-40622230/40622209 **Email:** mb@indiacp.com; **இணையதளம்:** www.corporateprofessionals.com **SEBI பதிவு எண்.**: INM000011435 **வெலிடிட்டி காலம் :** நிரந்தரம் **நிறுவன அடையாள எண்:** U74899DL2000PTC104508	Skyline Financial Services Pvt. Ltd. **ஸ்கைலிங் பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்** டி-153-ஏ, 1வது தளம், ஓக்லா இன்டஸ்டிரியல் ஏரியா, பேஸ்-1, புது டில்லி - 110020, இந்தியா. **தொடர்பு நபர் : திரு.பவன் சிங் பிஷ்,** **போன்:** 011-26812682/83 & 64732681 to 88 **Email:** admin@skylinerta.com **Website :** www.skylinerta.com **SEBI பதிவு எண்.**: INR000003241 **வெலிடிட்டி காலம் :** நிரந்தரம் **நிறுவன அடையாள எண்:** U74899DL1995PTC071324

கையகப்படுத்துவர்க்காக மற்றும் சார்பாகவும்
இடம் : லக்னோ Sd/-
நாள் : 17.08.2024 **நவின் கவுல்**
(அங்கீகரிக்கப்பட்ட கையொப்பாளர்)

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
repsalem@hindutamil.co.in

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).